மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.201/2011</u>

2026ம் ஆண்டு ஜனவரி 20ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>20.01.2026 பி.வா.சா.5 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 8ம் பிரதிவாதி தங்கராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் சென்னியப்பகவுண்டர் என்றால் சரிதான். மேற்படி சென்னியப்ப கவுண்டர் கடந்த 30.01.1992 தேதியில் 4 ஏக்கர் 67 சென்ட் நிலத்தை பொதுவில் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற பின் சென்னியப்ப கவுண்டர் மற்றும் மற்ற பாகஸ்தர்கள் சேர்ந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பாக்கறார் எதுவும் செய்து கொள்ளவில்லை. சென்னியப்ப கவுண்டர் 4 ஏக்கர் 67 சென்ட் நிலத்தை கிரையம் பெற்ற பின் அந்த நிலத்தில் வீடு கட்டி அந்த நிலத்தை தனியாக அனுபவம் செய்து வந்தார் என்றால் அதில் வீடு எதுவும் இல்லை உட்பிரிவு செய்து கொண்டார் என்றால் பொதுவில் தான் உள்ளது உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை.

2. அவ்வாறு உட்பிரிவு செய்த கொண்ட பின் சென்னியப்ப கவுண்டர் 25.06.2009 ஆம் தேதியில் தான் கிரயம் பெற்ற சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்து சரியல்ல. பொதுவில்தான் உள்ளது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், 8ம் பிரதிவாதி சென்னியப்ப கவுண்டர் ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அந்த சொத்துக்களில் வீடு கட்டியும், கட்டிடம் கட்டியும் தேங்காய் களம் அமைத்தும் வங்கி கடன் உதவி பெற்றும் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

3. 8ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை தனியாக தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரும் விபரம் உபயவாதிகளுக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி துரைசாமி தாவா சொத்துக்களில் தனக்கு வாய்மொழி பாகக்காரின் அடிப்படையில் பாகம் பிரிந்த சொத்துக்களில் போர்வெல் அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 9ம் பிரதிவாதி சந்திரசேகர் அவருக்கு பாகம் பிரிந்த சொத்துக்களில் சைட் போட்டு விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

4. 19 ஆம் பிரதிவாதி சச்சிதானந்தம் அவருக்கு பாகம் பிரிந்த சொத்துக்களில் சிமெண்ட் கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்து தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 33 சென்ட் நிலத்தை நான் தனிப்பட்ட முறையில் தனியாகத்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் இல்லை பொதுவில் தான் அனுபவம் செய்து வருகிறேன்.

5. வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி ஆகியோர் வாய்மொழி பாகக்கறார் அடிப்படையில் அவர்களுக்கு தனித்தனியாக பாகம் பிரிந்த சொத்துக்களை தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(9, 33, 26 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.01.20 18:29:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்